## 111. உம்ம போல ஒரு தெய்வத்தை

பல்லவி

உம்ம போல ஒரு தெய்வத்தை
நான் கண்டதியில்லை ஐயா
இந்த பூமியிலே இந்த பூமியிலே – 2

அனுபல்லவி

மனஉருக்கமும் மகா இரக்கமும்
நிறைந்த தேவன் ஒரே தேவன் நீங்க ஐயா

சரணங்கள்

1. பாவிகள் தொழுநோயாளிகள்
இந்த சமூதயம் ஒதுக்கி தள்ளிடுமே
தள்ளின அவர்களை நண்பராக்கி
அவர்கள் வீட்டில் பந்தியிருந்து மகிழுந்திரே
- உம்ம போல ஓர

2. ஏழைகள் எளியோரை பணம்படைத்தவர்கள்
என்றுமே மதியாமல் இருப்பார்கள்
ஐஸ்வரியசம்பனா் தேவன் நீரே
ஏழைகோலமாக உலகில் வந்தீா்
- உம்ம போல ஒரு

3. பாவத்திலே பிடிபட்ட பெண்ணை
குற்றசாட்ட உம்முன்னே நிறுத்தினார்கள்
குற்றசாட்டினவர்களை நியாய தீர்த்து
பாவியான பெண்ணை மன்னித்தீரே
- உம்ம போல ஒரு

4. கணவனை இழந்துவிட்ட பெண்களை
உறவுகளும் சொந்தகளும் வெறுத்து தள்ளுமே
நாயின் ஊா் விதவையின் கண்ணீரை கண்டு
அவளின் மகனை உயிரோடு எழுப்பி தந்தீர்
- உம்ம போல ஒரு